1987 மே 4.

4. தகவல் கோரல்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: பாயின்ட் ஆப் ஆர்டர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேங்கடரமணன் உட்காருங்கள். அசெம்பளியிலிருந்து பேசுகிற மாதிரிப் பேசவேண்டும். (குறுக்கிடு). என் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றி என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லியாகிவிட்டது. இங்கே கேட்க முடியாது. என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள்.

(முற்பகல் 11-20)

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS